


## வரி என்பதன் பொருள்

- ஒரு குடிமகன் (அ) நிறுவனம் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் தொகையே வரி எனப்படும்.
- பேராசிரியர் செலிக்மேன் (Seligman) ”வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகை. அரசிடமிருந்து எவ்வித நேரடி நன்மையும் எதிர் பார்க்காமல், கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி எனப்படும்” என்று கூறுகிறார்.

## ஆடம் ஸ்மித்தின் வரிவிதிப்பு விதிகள்



**1. சமத்துவ விதி**

- ஒருவன் தன் சக்திக்கேற்ப வரி செலுத்துவதே இதன் கொள்கை ஆகும். அதாவது ஏழைகள் மீது குறைவாகவும் செல்வந்தர்கள் மீது அதிகமாகவும் வரி விதித்தல் வேண்டும் என்கிறது.

**2. தெளிவு விதி**

- ஒருவன் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு எப்பொழுது யாரிடம் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறது.



**3. வசதி வரி**

- வரி செலுத்துவோருக்கு பாரம் இல்லாமல் வசதியாக இருத்தல் வேண்டும். (எ.கா) சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும் வருமான வரி, பொருட்களை வாங்கும்போதே பெறப் படும் பண்டங்கள் மீதான வரி, அறுவடையோடு பெறப்படும் நிலவரி முதலியன.

**4. சிக்கன விதி**

- இது வரி விதிப்பதிலும், வசூலிப்பதிலும் அதிக பணம் விரயமாகாமலிருக்க வேண்டும் என்கிறது.

# 1. வரி




- விகித வரிவிதிப்பு முறை
- வளர்வீத வரிவிதிப்பு முறை
- தேய்வீத வரி விதிப்பு முறை,
- மீத வளர்வீத வரிவிதிப்பு முறை

**விகித வரிவிதிப்பு முறை**

**(Propotional Tax)**

▶ இவ்விதமான வரிவிதிப்பு முறையில் வருமானம் அதிகமானாலும் குறைந் தாலும் வரி விதிப்பில் மாற்றம் இல்லாமல் நிலையானதாக இருக்கும். ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் ஒரே மாதிரியான வரிவிகிதம் விதிக்கப்படும்.

**வளர்வீத வரிவிதிப்பு முறை**

**(Progressive Tax)**

▶ இம்முறையில் வருமானத்தின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும் போது வரியும் அதிகரிக்கும்.

▶ வருமானம் அதிகரித்தால் வரியும் அதிகரிக்கும், (எ.கா) வருமான வரி.

**தேய்வுவீத வரிவிதிப்பு முறை (Regressive Tax)**

▶ இம்முறையில் வருமானம் அதிகரிக்கும் போது செலுத்த வேண்டிய வரியின் அளவு குறையும். இம்முறையில் பணக் காரர்களை விட ஏழைகள் மீதான வரிச்சுமை அதிகமாக இருக்கும் எனவே இது நியாயமற்றது.

**நேர்மாற்று வளர்வீத வரிவிதிப்பு முறை**

**(Degressive Tax)**

▶ இது விகித வரிவிதிப்பு வளர்வீத வரிவிதிப்பு ஆகியவற்றின் கலவையே ஆகும். இதில் வருவாய் உயர உயர வரிவீதமும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை உயர்ந்து பின்பு சீரான நிலையை அடைகிறது.




# 2. நேர்முக மற்றும் மறைமுக வரிகள்

**(Direct and Indirect Taxes)**

▶ பேராசிரியர் டால்டனின் கூற்றுப்படி ”நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்பட்டதோ, அவரே வரி செலுத்துவதாகும்.

▶ மறைமுக வரியென்பது ஒருவர் மீது விதிக்கப்பட்டு மற்றொருவர் பகுதியாகவோ (அ) முழுமையாகவோ செலுத்துவதாகும்.

▶ நேர்முக வரிகள் - வருமான வரி, சொத்துவரி, வெகுமான வரி, தீர்வை வரி முதலியன.

▶ மறைமுக வரிகள் - சுங்க வரி, விற்பனை வரி முதலியன.

## 3. மதிப்புக் கூட்டு வரி
## (Value Added Tax)

- 2002-ம் ஆண்டு மாநில நிதி அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப் பட்ட முடிவின்படி VAT கொண்டு வரப்பட்டது.
- ஒரு பொருளுக்கே இரண்டு முறை வரி செலுத்தும் சூழல் ஏற்படுவதை தவிர்க்கவே மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப் பட்டது.
- முதன் முதலாக VATஐ அறிமுகப் படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும்.
- இந்தியாவில் ஹரியானா மாநிலம் முதன் முதலில் VATஐ அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவில் எட்டு மாநிலங்கள் தவிர பிறவற்றில் ஏப்ரல் 2005 முதல் மதிப்புக்கூட்டு வரியானது அறிமுகப் படுத்தப்பட்டது.
- தமிழகத்தில் ஜனவரி 2007 முதல் VAT அறிமுகப்படுத்தப்பட்டது.

### மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகள் சில

- வருமான வரி (Income Tax) வேளாண்மை தவிர்த்து.
- உற்பத்திகள் மீதான சுங்க வரி (Excise Duty)
- ஏற்றுமதி இறக்குமதி மீதான கலால் வரி (Customs Duty)
- செலவீனங்கள் மீதான வரிகள் (Expenditure Tax)
- சொத்துக்கள் மீதான வரிகள் (Wealth Tax)
- அன்பளிப்பு வரிகள்; (Gift Tax)
- மூலதனத்தின் மீதான வரிகள் (Taxation on Capital Gains)







### மாநில அரசுகளால் விதிக்கப்படும் வரிகள் சில

1. நில வருவாய் (Land Revenue)
2. கேளிக்கை வரி (Entertainment Tax)
3. தொழில் வரி (Professional Tax)
4. விற்பனை வரி (Sales Tax)
5. வேளாண் வருவாய் மீதான வரிகள்
6. மதுவகைகள் மீதான ஆயத் தீர்வைகள்
7. முத்திரைத்தாள் வரிகள், நீதிமன்ற மற்றும் பதிவுக் கட்டணம்.
8. கனிமப் பொருள்களின் உரிமங்கள் மீதான வரிகள்.
9. மின் நுகர்வு, விற்பனை மீதான வரிகள்.
10. மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள் முதலியன.

